பரீட்சகரின் அறிக்கை

மட்டம் I பரீட்சை – 2025 யூலை

(101) நிதிக் கணக்கீடு

பகுதி A

வினா இல. 01 (40 புள்ளிகள்)

(ஒரு கட்டாய வினா)

இல. **1.1** தொடக்கம் **1.10** வரை தரப்பட்ட வினாக்களில் கொடுக்கப்பட்ட விடைகளிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யும்படி கேட்கப்பட்டதுடன், இல. **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்ட கூற்றுக்கள் **"சரியானதா"** அல்லது **"தவறானதா"** எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. மேலும், இல. **1.16** தொடக்கம் **1.20** வினாக்களுக்கு சரியான விடை அளிக்குமாறு கேட்கப்பட்டது.

இவ்வினாவில் காணப்பட்ட ஒவ்வொரு உப பிரிவுகளுக்கும் பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகளில் இருந்த பொதுவான வழுக்கள் / பலவீனங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன :

வினா 1.1

நிதிக் கணக்கீட்டின் நோக்கம் பற்றி இந்த வினா கேட்டுள்ளது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியான விடையான இல. (2) இனைத் தெரிவு செய்திருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் பிழையான விடையான இல. (1) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

வினா 1.2

நிதி நிலைக் கூற்றின் அடிப்படை மூலகங்களைக் கொண்ட தொகுதி எதுவென இங்கு கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியான விடையான இல. (3) இனைத் தெரிவு செய்திருந்த அதே வேளை சில பரீட்சார்த்திகள் பிழையான விடைகளான இல. (1) அல்லது (2) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

வினா 1.3

இங்கு நிதித் தகவல்களின் அடிப்படையான தர ரீதியான பண்புகள் பற்றிக் கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையான இல. 2, தொடர்புடைமை என்பதைக் குறிப்பிட்டிருந்தனர். அதே சமயம் சில பரீட்சார்த்திகள் பிழையான விடையான இல.(1), தொடர்ந்தியங்கும் கோட்பாடு மற்றும் இல. (3), அட்டுறு அடிப்படை ஆகியவற்றை வழங்கியிருந்தனர்.

வினா 1.4

இங்கு தரப்பட்ட கூற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையான (1) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு என்பதைத் தெரிவு செய்திருந்த அதே வேளை, சில பரீட்சார்த்திகள் பிழையான விடைகளான (2) அட்டுறு எண்ணக்கரு அல்லது (3) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு போன்றவற்றைக் குறிப்பிட்டிருந்தனர்.

வினா 1.5

வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான வியாபாரத்தின் நிகர இலாபம் கணிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் நிகர இலாபத்தைச் சரியாகக் கணிப்பிட்டு அதனை (1) ரூ. 2,700,000/- ஆகச் சமர்ப்பித் திருந்தனர். அதே வேளை சில பரீட்சார்த்திகள் பிழையாகக் கணிப்பிட்டு, அவர்களின் பிழையான விடையின் அடிப்படையில் (2) ரூ. 1,700,000/- அல்லது (4) ரூ. 2,500,000/- போன்றவற்றைத் தெரிவு செய்திருந்தனர்.

வினா 1.6

தரப்பட்ட ஊடுசெயல்களில் எது தரப்பட்ட கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கு மிகவும் பொருத்தமானது என வினவப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை இல. (2) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

வினா 1.7

வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான தீர்ப்பனவு காரணமாக கணக்கீட்டு மூலகங்களில் ஏற்படும் தாக்கத்தைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை (3) சொத்துக்களின் குறைவு மற்றும் பரிப்புக்களின் குறைவு என்பதைத் தெரிவு செய்திருந்தனர்.

வினா 1.8

தரப்பட்ட எந்த ஊடுசெயல் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் என இவ்வினாவில் கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை இல. (2) ஐத் தெரிவு செய்திருந்தனர். அதே சமயம் சில பரீட்சார்த்திகள் விடை இல. (3) அல்லது (4) போன்ற பிழையான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர்.

வினா 1.9

இவ்வினா மூல ஆவணங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையான (1) வரவுக் குறிப்பு என்பதைத் தெரிவு செய்திருந்தனர். அதே வேளை சில வேறு பரீட்சார்த்திகள் பிழையான விடையான (3) செலவுக் குறிப்பைத் தெரிவு செய்திருந்தனர்.

வினா 1.10

இவ்வினா இரட்டைப் பதிவுக் கணக்கீட்டு முறைமை தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவு செய்யுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை இல. (4) ஐத் தெரிவு செய்திருந்தனர். அதே சமயம் வேறு சிலர் பிழையான விடைகளான விடை இல. (2) அல்லது (3) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

- **இல. 1.11 தொடக்கம் 1.15 வரை தரப்பட்ட கூற்றுக்கள் "சரியானதா" அல்லது "தவறானதா" எனக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.**

  அதிகளவான பரீட்சார்த்திகள் வினா இல. 1.11, 1.13, 1.14 இல் தரப்பட்ட கூற்றுக்களை சரியாக விளங்கிக் கொண்டு, சரியாக விடை அளித்திருந்தனர்.

  அதிகளவான பரீட்சார்த்திகள் வினா இல. 1.12, 1.15 ஆகியவற்றில் தரப்பட்ட கூற்றுக்கள் பற்றி சரியாக புரிந்து கொள்ளவில்லை. இதனால் அவை ''சரியான'' கூற்றுக்களாக இருந்த போதிலும் ''தவறான'' கூற்றுக்கள் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

- **இல. 1.16 தொடக்கம் 1.20 வரையான வினாக்களுக்கு விடையெழுதுமாறு இங்கு கேட்கப்பட்டது.**

வினா 1.16

இங்கு காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் (காசேட்டிற்கும்) வங்கிக் கூற்றில் காட்டப்பட்ட கணக்கிற்கும் இடையேயான கால வேறுபாட்டிற்கான சாத்தியமான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் காசோலை வைப்புச் செய்யப்பட்ட போதிலும் அவை தேறாது இருத்தல், காசோலை விநியோகிக்கப்பட்ட போதிலும் அவை வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாது இருத்தல் போன்ற சரியான விடயங்களைக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் காசேட்டின் சீராக்கங்கள் தொடர்பான விடயங்களையும் சமர்ப்பித்திருந்தனர். உதாரணமாக, நேரடியாக வங்கியால் பெறப்படுகின்ற செலவுகள் மற்றும் வரவுகள்.

வினா 1.17

இங்கு நடைமுறைச் சொத்துக்களுக்கும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கும் இடையேயான வேறுபாட்டைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகமான பரீட்சார்த்திகள் இது தொடர்பில் தெளிவான புரிதலைக் கொண்டிருக்காததால், பூரணமான சரியான விடை சமர்ப்பிக்கப்படவில்லை. ஒரு சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே அறிக்கையிடல் காலப்பகுதியின் 12 மாதங்களுக்குள் தேறுகின்ற சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்கள் எனவும் 12 மாதங்களுக்குப் பின்னர் தேறுகின்ற சொத்துக்கள் நடைமுறையல்லாச் சொத்துக்கள் எனவும் சரியாக விடை அளித்திருந்தனர்.

வினா 1.18

இங்கு இல. (1), (2) இல் தரப்பட்ட ஒவ்வொரு ஊடுசெயலையும் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் சரியான மூல ஆவணத்தை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. இல. (1), (2) இற்கு சரியான விடைகளாக பெறுவனவு மற்றும் கொள்வனவு விலைப்பட்டியல் தரப்பட்டுள்ளன. அதே வேளை சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் பிழையான விடைகளை

எழுதியிருந்தனர். உதாரணமாக (1) காசுப் பெறுவனவுகள் நாட்குறிப்பேடு – வரவுக் குறிப்பு, (2) விற்பனை விலைப்பட்டியல், நாட்குறிப்பேடு, பொதுப் பேரேடு.

வினா 1.19

உரிமம் ஒன்றுக்கு வணிக நெறிமுறை ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருந்தனர். அதே சமயம் சில பரீட்சார்த்திகளிடம் இது தொடர்பில் சரியான புரிதல் இன்மையால் அவர்கள் பிழையான விடைகளை அளித்திருந்தனர்.

வினா 1.20

இங்கு, உரிமம் ஒன்றுக்கு கணக்கீட்டு எண்ணக்கருக்களின் அவசியத்தன்மைக்கான இரண்டு காரணங்களைப் பட்டியலிடுமாறு அறிவுறுத்தப்பட்டது. கணிசமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர். அதே வேளை சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளுக்கு இது தொடர்பான சரியான விளக்கம் இன்மையால் அவர்கள் பிழையான விடைகளை வழங்கியிருந்தனர்.

பகுதி B

வினா. 02 – 10 புள்ளிகள்

இவ்வினா 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உற்பத்திக் கிரயக் கூற்றைத் (உற்பத்திக் கணக்கு) தயாரிப்பது தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியான விடைகளைச் சமர்ப்பித்திருந்தனர். பின்வரும் பலவீனங்கள் இங்கு அவதானிக்கப்பட்டிருந்தன :

1. சரியான வடிவம் பயன்படுத்தப்படவில்லை.
2. புத்துருவாகும் வேலைகளுக்கான சீராக்கங்கள் முதன்மைக் கிரயத்திற்குச் செய்யப்படாது உற்பத்திக் கிரயத்திற்குச் செய்யப்பட்டிருந்தன.
3. உற்பத்தி மீது ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட ஊக்கத்தொகை மற்றும் நேர் கூலிகள் என்பன நேர் கிரயத்தின் கீழ் சீராக்கம் செய்யப்பட வேண்டும் என்ற போதிலும் சில பரீட்சார்த்திகள் அவற்றை மேந்தலைக் கிரயத்தில் சீராக்கம் செய்திருந்தனர்.
4. மூலப் பொருள்களின் இறுதி இருப்பு, மூலப் பொருள்களின் ஆரம்ப இருப்புடன் குழப்பி, சமர்ப்பித்திருந்தனர்.
5. இலாப எல்லை 18% ஆனது உற்பத்திக் கிரயத்தில் கணிப்பிடப்படவில்லை.
6. நுகர்வு செய்யப்பட்ட மூலப் பொருள்களின் கிரயமானது கணிப்பீடு செய்யப்பட்ட முதன்மைக் கிரயம் மற்றும் மொத்த உற்பத்திக் கிரயங்களில் குறிப்பிடப்படவில்லை.
7. தொழிற்சாலை மற்றும் அலுவலகத்திற்கிடையில் மின்சாரம், நீர், மற்றும் வாடகையைப் பகிர்வதற்குத் தரப்பட்ட சதவீதங்கள் பயன்படுத்தப்படவில்லை. உற்பத்தி மேந்தலைகள் தொழிற்சாலைக்கும் அலுவலகத்திற்குமிடையே செலவு செய்யப்படவில்லை.

வினா. 03 – 10 புள்ளிகள்

இவ்வினா பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்ததன் பின்னர் பரீட்சை மீதியைத் தயாரிப்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையை எழுதியிருந்ததுடன், பொதுவாக பின்வரும் பலவீனங்களை அவதானிக்க முடிந்தது :

1. பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்குப் பதிலாக, சில பரீட்சார்த்திகள் பேரேட்டுக் கணக்கை மாத்திரம் தயாரித்திருந்தனர்.

2. பரீட்சை மீதியில் வரவுப் பதிவு செய்யப்பட வேண்டிய பெறுமானங்கள் செலவுப் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், செலவுப் பதிவு செய்யப்பட வேண்டிய பெறுமானங்கள் வரவுப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

3. கடன் அடிப்படையிலான விற்பனைகள் மற்றும் கடனடிப்படையிலான கொள்வனவுகள் என்பன வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் வியாபாரக் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஊடாகச் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

4. காசு அடிப்படையிலான விற்பனைகள், கடன் அடிப்படையிலான விற்பனைகள், மற்றும் காசு அடிப்படையிலான கொள்வனவுகள், கடன் அடிப்படையிலான கொள்வனவுகள் என்பன பரீட்சை மீதியில் தனித்தனி உருப்படிகளாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

5. 2025 சனவரி 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட விநியோக வேனுக்கு 03 மாதங்களுக்கான தேய்மானம் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

6. சில்லறைக் காசேட்டிற்கு மாற்றப்பட்ட தொகையிலிருந்து செலுத்தப்பட்ட சில்லறைச் செலவினங்களைக் கழித்ததன் பின்னரான சரியான சில்லறைக் காசு மீதி ரூ. 75,000 /- ஆனது பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

7. சில்லறைக் காசுச் செலவினங்கள் தனித்தனியாக வகைப்படுத்தப்படவில்லை என்பதுடன் அத்தகைய செலவினங்கள் மொத்தமாக பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டிருந்தன.

8. 10% வருடாந்த வட்டி வீதத்தில் 2024 அக்டோபர் 01 இல் திறக்கப்பட்ட நிலையான வைப்பு தொடர்பில் 06 மாதங்களுக்கான வட்டி வருமானம் சரியாகக் கணிப்பிடப்பட்டு, நிதி நிலைக் கூற்றில் குறிப்பிடப்படவில்லை.

9. கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான அட்டுறு செலவினங்களுடன் தொலைபேசி மற்றும் இணையக் கட்டணங்கள் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

வினா. 04 – 10 புள்ளிகள்

இவ்வினா (a), (b) என இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது.

பகுதி (a) ஆனது வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்குமாறும் தொங்கற் கணக்கைத் தயாரிக்குமாறும் கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளைச் சமர்ப்பித்திரந்தனர். ஆனால் பொதுவாக கீழ்வரும் பலவீனங்களும் வழுக்களும் கண்டறியப்பட்டன :

(a)

1. நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டன.
2. நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதும்போது, நாட்குறிப்பேட்டுப் பதிவுடன் தொடர்புடைய வரவு மற்றும் செலவுப் பெறுமானங்கள் இடம்மாறிச் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன.
3. நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்கும்போது நாட்குறிப்பேட்டு ஊடுசெயல்களுக்கு முன்னால் வரவு மற்றும் செலவு எனப் பதிவு செய்யப்படவில்லை.
4. தொங்கற் கணக்கினால் சரி செய்யப்பட வேண்டிய தவறான பதிவுகள் இனங்காணப் படவில்லை.
5. உருப்படி இல. 1 தொடர்பில், 2024 ஏப்ரல் 01 இல் ரூ. 60,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 25% இல் தேய்மானம் சரியாகக் கணிப்பிடப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் தேய்மானத்திற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவைச் சமர்ப்பித்திருக்கவில்லை.
6. உருப்படி இல.3 இல் குறிப்பிடப்பட்ட வழு சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. நாட்குறிப்பேட்டுப் பதிவு வாடகைச் செலவினக் கணக்கிற்கும் வாடகை வருமானக் கணக்கிற்கும் மாத்திரம் தரப்பட்டிருந்தன.
7. உருப்படி இல.6 இல் குறிப்பிடப்பட்ட வழு சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. ரூ. 900/- இற்குப் பதிலாக ரூ.4,500/- இற்கும் ரூ. 5,400/- இற்கும் இடையிலான வேறுபாடு நாட்குறிப்பேட்டுப் பதிவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(b) தொங்கற் கணக்கைத் தயாரிக்கும்போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

1. தொங்கற் கணக்கின் ஆரம்ப வரவு மீதி, கணக்கில் செலவொன்றாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.
2. தொங்கற் கணக்கின் ஆரம்ப மீதி தொங்கற் கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்படவில்லை.
3. தொங்கற் கணக்குடன் தொடர்புடைய வரவுப் பதிவுகள் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் செலவுப் பதிவுகள் கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

4. தொங்கற் கணக்கின் ஆரம்ப வரவு மீதி, தொங்கற் கணக்கிலுள்ள கீழ் கொணரப்பட்ட மீதியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

வினா. 05 – 10 புள்ளிகள்

இவ்வினா (A), (B) என இரண்டு உப பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

பகுதி (A) ஆனது கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது ஒவ்வொரு ஊடுசெயலினதும் தாக்கம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது.

பகுதி (B) இல் முன்வைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், (a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கையும் (b) 2025 மார்ச் 31 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றையும் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

(A) கணக்கீட்டுச் சமன்பாடு மீதான தாக்கங்கள் :

1. சில பரீட்சார்த்திகள் கணக்கீட்டுச் சமன்பாடு மீதான ஒவ்வொரு ஊடுசெயலினதும் தாக்கம் பற்றி சரியான புரிதலைக் கொண்டிருக்கவில்லை. அதாவது சொத்துக்கள், பரிப்புக்கள் வருமானம், செலவினம், உரிமையாண்மைகளில் அதிகரிப்பா அல்லது குறைவா என்பது, மற்றும் சமன்பாட்டுப் பதிவுகளை நேர்ப் பெறுமானமா அல்லது மறைப்பெறுமானமா என்று காட்டுவது.

2. சில பரீட்சார்த்திகள் சொத்துப் பக்கம் அல்லது பரிப்புப் பக்கத்தில் மாத்திரம் ஒரு தனித்த பதிவாக கணக்கீட்டுச் சமன்பாடு மீது தொடர்புடைய ஊடுசெயல்களின் தாக்கத்தை முன்வைத்திருந்தனர்.

3. கணக்கீட்டுச் சமன்பாட்டில், தரப்பட்ட ஊடுசெயல்களின் பணப் பெறுமதியைப் பதிவு செய்வதற்குப் பதிலாக ‘‘அதிகரிப்பு’’ அல்லது ‘‘குறைவு’’ என எழுதியிருந்தனர்.

(B) பகுதி

(a) காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கைத் (காசேட்டைத்) தயாரிக்கும்போது அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் பின்வருமாறு :

1. சில பரீட்சார்த்திகள் காசேட்டில் சீராக்கப்பட வேண்டிய ஊடுசெயல்கள் தொடர்பிலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட வேண்டிய ஊடுசெயல்கள் தொடர்பிலும் சரியான புரிதலைக் கொண்டிருக்கவில்லை.

2. காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு செலவுப் பதிவு செய்யப்பட வேண்டிய ஊடுசெயல்கள் வரவுப் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் வரவுப் பதிவு செய்யப்பட வேண்டிய ஊடுசெயல்கள் செலவுப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

3. சில பரீட்சார்த்திகள் சீராக்கப்பட்ட காசேட்டைத் தயாரிக்கும்போது ஆரம்ப வரவு மீதி ரூ. 26,500/- இனை காசேட்டில் செலவாக உள்ளடக்கியிருந்தனர்.

4. சீராக்கப்பட்ட காசேடு சமப்படுத்தப்படவில்லை என்பதுடன் இறுதி மீதி முன்கொண்டு செல்லப்படவில்லை.

பகுதி B

(a) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கும்போது அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் பின்வருமாறு :

1. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் எவ்வகையான ஊடுசெயல்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது பற்றிய தெளிவான புரிதலைப் பரீட்சார்த்திகள் கொண்டிருக்காததால், காசேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய ஊடுசெயல்கள் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

2. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைச் சில பரீட்சார்த்திகள் தயாரிக்கும்போது, திருத்தப்பட்ட காசேட்டின் வரவு மீதியின்படி, ''சமர்ப்பிக்கப்படாத காசோலைகளைச்'' சேர்ப்பதற்குப் பதிலாகக் கழித்திருந்தனர், ''வைப்புச் செய்யப்பட்டு, ஆனால் தேறாத காசோலையை'' கழிப்பதற்குப் பதிலாகச் சேர்த்திருந்தனர்.

பகுதி C

வினா. 06 – 20 புள்ளிகள்

இவ்வினா பகுதிகள் (a), (b) என இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. பகுதி (a) ஆனது முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பது பற்றியும் பகுதி (b) ஆனது நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பது பற்றியும் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சிறப்பாக இருந்தது.

பொதுவாக அவதானிக்கப்பட்ட வழுக்கள் மற்றும் குறைபாடுகள் பின்வருமாறு :

(a) முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரித்தல் :

1. ஆண்டிற்கான சரியான தேய்மானத் தொகையானது நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்படாததுடன் வருமானக் கூற்றிற்கும் எடுக்கப்படவில்லை.

2. முற்றடக்க வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றிய புரிதல் இல்லாததால், நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய சில உருப்படிகள் முற்றடக்க வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3. ஆண்டின் காலப்பகுதியில் அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்யப்பட்ட ரூ. 80,000/- ஆனது பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

4. மொத்த இலாபத்தைக் கணிப்பிடுவதற்கு சில பரீட்சார்த்திகள் ஆண்டின் ஆரம்ப இருப்பை கழித்து, இறுதி இருப்பைச் சேர்த்திருந்தனர்.

5. பரீட்சை மீதியிலுள்ள உருப்படிகள் ஆயிரங்களில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், கணக்கிணக்கங்களில் உள்ள உருப்படிகள் முற்றடக்க வருமானக் கூற்றில் முழுமையான பெறுமதிகளிலும் காட்டப்பட்டிருந்தன.

6. 2025 மார்ச் மாதத்துடன் தொடர்புடைய களஞ்சிய வாடகை ரூ. 150,000/- ஆனது ஆண்டிற்கான செலவினத்திற்கு சரியாகச் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

7. ரூ. 8,400,000/- (கட்டடத்தின் பெறுமதி ரூ. 6,000,000/-) இலிருந்து காணியின் பெறுமதி ரூ. 2,400,000/- இனைக் கழிப்பதன் மூலம் கட்டடத்தின் தேய்மானம் கணிப்பிடப்பட வேண்டும் என்ற போதிலும், பரீட்சார்த்திகள் முழுப் பெறுமதியான ரூ. 8,400,000/- இற்கும் தேய்மானத்தைக் கணிப்பிட்டிருந்தனர்.

8. வியாபார வருமதிகளிலிருந்து பதிவழிக்கப்பட்ட அறவிட முடியாக் கடன் ரூ. 80,000/- சீராக்கம் செய்யப்படவில்லை.

9. 12% வருடாந்த வட்டியில் 2024 அக்டோபர் 01 இல் பெற்றுக் கொள்ளப்பட்ட வங்கிக் கடன் ரூ. 3,000,000/- மீதான 6 மாதங்களுக்கான வட்டி ரூ.180,000/- ஆனது பதிவு செய்யப்படவில்லை.

10. 2025 சனவரி 01 முதல் 2025 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு ரூ. 120,000/- ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட தீ அபாயக் காப்புறுதிக் கிரயத்துடன் தொடர்புடைய 3 மாத காப்புறுதிச் செலவினம் ரூ.30,000/- ஆனது தேவையானவாறு சீராக்கம் செய்யப்படவில்லை.

நிதி நிலைக் கூற்றைத் தயாரித்தல் :

1. ஆண்டின் காலப்பகுதியில் அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன் பதிவழிப்புக்கான ஏற்பாடுகள் வியாபார வருமதிகளிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

2. 2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் உள்ளடக்கப்படவில்லை. ஆண்டிற்கான தேய்மானம் மாத்திரம் திரண்ட தேய்மானமாகக் காட்டப்பட்டிருந்தது.

3. செலுத்த வேண்டிய களஞ்சிய வாடகை பதிவு செய்யப்படவில்லை.

4. 2024 அக்டோபர் 01 இல் பெற்றுக் கொள்ளப்பட்ட வங்கிக் கடனுக்கான தொடர்புடைய காலப்பகுதியைக் கவனத்திற் கொள்ளாததால் அட்டுறுவான வங்கிக் கடன் வட்டியானது தவறாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

5. 2024 அக்டோபர் 01 இல் பெறப்பட்ட வங்கிக் கடனானது நடைமுறையல்லாப் பரிப்புக்களின் கீழ் முன்வைக்கப்பட வேண்டும் என்ற போதிலும், சில பரீட்சார்த்திகள் அதனை நடைமுறைப் பரிப்புகளின் கீழ் முன்வைத்திருந்தனர்.

6. நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றிய அடிப்படைப் புரிதல் இல்லாததன் காரணமாக, கொள்வனவுகள், விற்பனைகள், ஆரம்ப இருப்பு, வாடகை வருமானம் மற்றும் ஏனைய செலவினங்கள் நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

7. சில பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றில் உருப்படிகளை வகைப்படுத்தாது, அனைத்து உருப்படிகளையும் ஒன்றாகப் பதிவு செய்திருந்தனர். உதாரணமாக, நடைமுறையல்லாச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள், தொக்கு மற்றும் பரிப்புக்கள், நடைமுறைப் பரிப்புக்கள்.

8. வியாபார வருமதிகள் நடைமுறைப் பரிப்புகளின் கீழும் வியாபார சென்மதிகள் நடைமுறைப் சொத்துகளின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

9. சில பரீட்சார்த்திகள் முன்செலுத்திய காப்புறுதிச் செலவினங்களை நடைமுறைச் சொத்துகளின் கீழ் முன்வைத்திருக்கவில்லை.

10 காணி மற்றும் கட்டடங்களைத் தனியாக முன்வைக்காது நடைமுறையல்லாச் சொத்துகளின் கீழ் தனித்தனி உருப்படிகளாக முன்வைத்திருந்தனர்.

- - -

<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்த கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u> :

(1) புதிய பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்களில் அதிக கவனத்தைச் செலுத்தவும்.

(2) வினாவைப் பல முறை வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

(3) இப்பாடத்துடன் தொடர்புடைய சுய கற்றல் புத்தகங்கள், முன்னோடி வினாத்தாள்கள், செய்தி மடல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிக்கவும்.

(4) அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களை சரியாக இனங்காண்பதுடன், வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும்.

(5) கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்பட வேண்டும்.

(6) வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் சரியாகக் காட்டவும்.

(7) அதிகமான கடந்தகால வினாத்தாள்களைச் செய்துபார்த்து, அறிவை மேம்படுத்தவும்.

(8) நேரத்தை வினைத்திறனான வகையில் செலவழிக்கவும்.

(9) விடைத்தாளைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் போன்றவை சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்கவும்.

(10) சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் அதியுயர் நம்பிக்கையுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -